# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19–A ருக்மினி லட்சுமிபதி சாலை, ( டிட்கோ வளாகம்),
எழும்பூர், சென்னை – 600 008
தொலைபேசி 28411376, 28411378, 28411379. தொலைநகல்: 28411377
மின்னஞ்சல்: tnerc@nic.in இணையதளம்: www.tnerc.gov.in


எண் 2 / 2012
நாள் : 30–03–2012

## செய்திக்குறிப்பு

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் மின்தொடரமைப்புக் கழகம் ஆகிய நிறுவனங்கள் 2011ஆம் ஆண்டு நவம்பர் 17 அன்று, முறையே சில்லறை மின்கட்டணம் மற்றும் மாநிலத்திற்குள் மின்செலுத்தல் மின்கட்டணம் ஆகியவற்றை நிர்ணயம் செய்வதற்காக மின்கட்டண மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. இந்த மனுக்கள், ஒரு வாரத்திற்குப் பின்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்பு பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டங்கள் தொடங்கப்பட்டன.

ஆணையம், 2012 ஜனவரி / பிப்ரவரியில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரையில் மனுக்களின் மீது பொதுமக்களின் கருத்துக்கேட்புக் கூட்டங்கள் நடத்தியது. பொதுமக்களின் கருத்துக்களுக்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றிடமிருந்து கூடுதல் விளக்கங்கள் பெறப்பட்டன. ஆணையம், இரண்டு மனுக்கள் மீதும் 2012, மார்ச் 30ஆம் நாளாகிய இன்று, மின்கட்டண ஆணைகளை பிறப்பித்துள்ளது.

இரண்டு ஆணைகளின் சிறப்பியல்புகள் பின்வருமாறு :

சில்லறை மின்கட்டணத்திற்கான தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மனு : –

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், கூடுதல் வருவாய் ரூ.9742/– கோடிகள் பெறுவதற்காக 37 விழுக்காடு மின்கட்டணம் உயர்த்துவதற்கு உத்தேசித்திருந்தது. மின்கட்டண மனுவில், தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்படும் மானியத்தொகையும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. தமிழ்நாடு அரசும் 2012 பிப்ரவரி 4ஆம் நாளிட்ட தன்னுடைய கடிதத்தில் மானியத்திற்கான வழிமுறைகளை உறுதி செய்திருந்தது. இந்த ஆணையில் அடங்கியுள்ள மின்கட்டண அட்டவணையில், அரசினால் சுட்டிக்காட்டப்பட்ட மானியத்தொகையையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

- ஆணையத்தின் ஆணையில் இரண்டு மாதங்களுக்கு 100 யூனிட்டுகளுக்கு குறைவாக மின் நுகர்வு செய்யும் வீட்டு உபயோக நுகர்வோருக்கு மிதமான அளவுக்கும், தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு மிதமான அளவுக்கும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. நிலையான கட்டணம் மற்றும் மின்சக்திக் கட்டணம் ஆகிய இரண்டிலும், தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு மிதமான அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

- இரண்டு மாதங்களுக்கு 100 யூனிட்டுகளுக்கு கீழ் மின்நுகர்வு செய்யும் பெட்டிக்கடைகளுக்கான மின்கட்டணம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கேட்டதைவிட குறைக்கப்பட்டுள்ளது.

- மாதாந்திர குறைந்தபட்சக் கட்டணம் அனைத்துவகை மின் நுகர்வோருக்கும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் கோரப்படும் உச்சநேர நீடிப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

- ஆணையம், விவாதிக்கப்பட்ட மின்திறன் காரணிக்கான ஊக்கத்தொகை குறியீடு எதனையும் குறித்துரைக்கவில்லை.

- மின்கட்டணம் மாற்றியமைப்பதன் பொருட்டு, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு கூடுதல் வருவாய் ரூ.7874/– கோடிகள் கிடைக்கும். இது 37 விழுக்காடு உயர்வாகக் கணக்கிடப்பட்டுள்ளது. சில வகையான மின்நுகர்வோரைப் பொறுத்தவரை, இந்த மின்கட்டண உயர்வானது, கிட்டத்தட்ட 9 ஆண்டுகளுக்குப் பின்பு செய்யப்பட்டுள்ளது. 2012–13ஆம் ஆண்டிற்கான மின்கட்டண அமைப்பு, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது, தன்னுடைய முழுமையான செலவுகளையும் திரும்பப்பெறுவதை பொருட்டு அந்த ஆண்டிற்கு மட்டுமேயானதாக செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், ரூ.24,742/– கோடியளவிலான ஒழுங்குமுறை பற்றாக்குறை உருவாக்குவதற்கு உத்தேசித்துள்ளது. இது தொடர்பான குறிப்பு ஆணையத்தினால் அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது மற்றும்

அரசு ஒரு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒழுங்குமுறை பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளதாக விளக்கமளித்துள்ளது. இந்த பிரச்சனை, பிந்திய மின்கட்டண ஆணைகளில் மறு பரிசீலனை செய்யப்படும்.

- அரசினால் வெளியிடப்பட்ட மின்வாரியத்திற்கான மாற்று திட்டத்தை அனைவரும் கடைபிடிக்க வேண்டுமாதலால் ஆணையம், அந்த மாற்றுத்திட்டத்தை நம்பிக்கைக்குரிய ஆரம்பமாக கருதுகிறது.

- விரைவில் மின்உற்பத்தி செய்யவிருக்கும் மேட்டூர்அனல் மின் உற்பத்தி நிலையம், வடசென்னை அனல்மின் உற்பத்தி நிலையம், தேசிய அனல்மின்உற்பத்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றின் கூட்டு முயற்சி முதலியவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய மின்சாரத்தினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு கிடைக்கக்கூடிய மின்சக்தி பற்றி ஆணையம் முடிவு எடுத்துள்ளது.

- விற்பனை திட்டமிடுதல், வரலாற்று புள்ளி விவரத்தின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது. ஆனால், தொழிற்சாலை நுகர்வோருக்கான மின்தேவையானது, அண்மையில் ஆணையத்தினால் ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி மின்கட்டுப்பாட்டை தளர்த்துவதன் மூலம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

- வேளாண் விசைக்குழாய் அமைப்புகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீரை, பட்டுப்புழு வளர்ப்பு, தோட்டக்கலை, கோழிவளர்ப்பு போன்றவற்றிற்கு பயன்படுத்தும் நடவடிக்கைகள் உள்ளடங்கலான வேளாண் பணிகளுக்கு உபயோகப்படுத்த வரையறுத்தலில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- வேளாண் மின் நுகர்வானது, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் வழங்கப்பட்ட மாதிரி விவரங்களின் அடிப்படையில் இந்த ஆணையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

- பல்வேறு பணிகள் செய்யப்படுவதன் பொருட்டு மூலதன முதலீட்டுத் திட்டம் மற்றும் மூலதனமாக்குதல் ஆகியவற்றை உரிய நேரத்தில் சமர்ப்பிக்குமாறு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம், மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் மூலதன மற்றும் வருவாய் கணக்குகளை ஒன்று சேர்க்க வேண்டாம் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம், மின்தொடர் இழப்புகளைப் பற்றி ஆய்வு செய்யுமாறும் 2012ஆம் ஆண்டு அக்டோபர் / நவம்பர் மாதங்களில் ஆணையத்திற்கு அதனை அளிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

- 1–4–2012 முதற்கொண்டு நடைமுறைக்கு வரவிருக்கும் மின்கட்டண அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

<u>மாநிலத்திற்குள் மின்செலுத்தல் மின்கட்டணம் மற்றும் பிற கட்டணங்களுக்கான தமிழ்நாடு மின்தொரடமைப்புக் கழகத்தின் மனு</u>

- தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கான ஆணையத்தின் ஆணை, மாநிலத்திற்குள் மின்செலுத்தல் அமைப்புமுறையை பயன்படுத்துவதற்காக ஆண்டு மின்செலுத்தல் கட்டணங்களை நிர்ணயித்துள்ளது. ஆண்டு மின்செலுத்தல் கட்டணங்கள், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினாலும், அந்த அமைப்புமுறையைப் பயன்படுத்தும் பிற பயன்படுத்துநர்களாலும் பங்கிட்டுக் கொள்ளப்படும். திறந்த நுழைவுரிமைக் கட்டணங்களும்கூட இந்த ஆணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- மின்னோட்ட கண்காணிப்புக் கட்டணங்கள் மற்றும் எதிர்வினைபுரி மின்கட்டணங்களும்கூட இந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு ஆணைகளும், 1–4–2012 முதற்கொண்டு நடைமுறைக்கு வரும் மற்றும் 31–3–2013 வரையில் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். 2013–14 ஆம் நிதியாண்டிற்கான மின்கட்டண நிர்ணயத்திற்காக மனுக்கள் 2012 நவம்பரில் உரிமம்தாரரால் தாக்கல் செய்யப்படவேண்டும்.

இந்த ஆணைகளைப் பிறப்பிப்பதன் மூலமாகவும், புதிய மின் திட்டங்கள் பயன்பாட்டுக்கு வருவதன் மூலமாகவும், ஒழுங்குமுறை சொத்தின் கடனைத் தீர்க்க அரசு ஆதரவு தெரிவிப்பதாலும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் தன்னுடைய செயற்பாட்டில் முன்னேற்றத்தை காண்பித்து, தமிழ்நாட்டு மின் நுகர்வோருக்கு சிறந்த முறையில் சேவை செய்ய வழிவகுக்கும் என்று ஆணையம் நம்புகிறது.

**(சி. குணசேகரன்)**
செயலாளர்